மரணைக் கண்டி. (காதல்).

திருப்பாதாளு பிள்ளை

மரணகண்டி

(சுர நூல்)

ஆசிரியர் :

எஸ். சிதம்பரதாணு பிள்ளை

B.A., B. Com., L.L. B., M.I.P.S. (London)



மரணக் கண்டி (சாரநூல்)

ஆசிரியர் :

வைத்ய ரத்னா : எஸ். சிதம்பரதாணு பிள்ளை
B.A., B. Com , L,L, B , M.I P.S, (London)

சித்த மகுட பிரசுரம்
33/6, கஜபதி நாயுடு தெரு,
செனாய் நகர் : சென்னை-30

சித்த மகுட வெளியீடு—9.
முதற் பதிப்பு நவம்பர் 1969

பதிப்புரிமையாளர் :-

வைத்ய ரத்ந S. சிதம்பரதாணு பி
B A, B com, LL. B., M I. P. S (L
விநாயகர் காலனி,
நெய்யூர் [illegible]
குமரி மாவட்டம்.

(Δ)

விலை : ரூ.



இப்படைப்பை உருவாக்க திருவாக்கருளிய
என் குருவும், பெரிய தந்தையுமான
அமரர்: இரணியல்: சித்தமகுடம்;
ஆ. சுப்பிரமணியப் பிள்ளை
அவர்கட்கு இந்நூல்
சமர்ப்பணம்.

முகவுரை

உயிரினங்களுக்கு மரணம் பொது விதி. நீண்ட ஆயுளோடு வாழ வேண்டிய மக்கள் சில தத்துவங்களைக் கடைப்பிடித்தல் நன்று. இவை வலியுறுத்தவேண்டி பண்டைய தமிழக விஞ்ஞானிகள் (சித்தர்கள்) நேரம், உழைப்பு முதலியவற்றை பல அரிய சுவடிகள் மூலம் தந்து போந்தனர். அவர்கள்...

"பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்
பண்பான அகத்தீசர் சட்டமுனிதர்
கோர்த்திடவே பதஞ்சலியும் கூனக்கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டிகேசர்
கூர்த்திடவே இடைக்காட்டர் சிவாயசித்தர்
கோங்கனர் அவர்தந்தை போகமுனிதர்
கார்த்திடவே மச்சமுனி புண்ணாக்கீசர்
காலங்கி சுந்தரரும் காப்புத்தானே"

...என்ற பதினென் சித்தர்களாகும். இவர்கள் விட்டுச் சென்ற நூற்கள் இன்று அரிய செல்வங்களாய்க் காணக்கிடக்கின்றன. இவர்கள் பசி, பிணி, மூப்பு இவைகளை வென்று ஆண்டவன் அருளைப் பெற்று மனித குலம் பிணிகளிலிருந்து விடுதலை பெற்று நல்வாழ்வு வாழப் பல விதிகளை குருசீடர் பரம்பரையாக மக்களுக்கு எடுத்துச்சொன்ன தெய்வங்களாகும் மனிதனுக்கு நூறு வயது என ஈசன் அமைத்த வரம்பைநீடிப்பதும், குறுக்கிக் கொள்வதும் மக்கள் கையில் உள்ளதென்பதை அறியவும், சித்தர்கள் உடல் வேறு, உயிர் வேறுஎன்று பிரித்திலர். உடலே கோயில், உயிரே தெய்வமாக ஒரு மனதாய்க்கொண்டு விளங்கினர். இதைத்தான் திருமூலரும்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்று செவ்வனவே செப்பியுள்ளார். இதிலிருந்து ...ம்

அழிய உயிர் அழியும் என அறியவும். மனிதகுலத்தின் நல னுக்காக பல துறைகளில் இசைந்து எண்ணற்ற அரிய ஏடு களை விட்டுச் சென்றனர் சித்தர்கள். இவர்கள் வைத்திய துறையில் அதிக அக்கரைகாட்டி பல இனிய அரிய மருத்துவ ஏடுகளை தமிழகத்து விடுத்தும் சென்றனர்

மனித உடலில் முக்கியமாக வாத, பித்த, கப நாடிகள் குறிப்பிட்ட நிறையில் இருந்து வருகிறது. இது நிறையிலி ருந்து பிறழாத நிலையில் மனிதன் நலமாய்க் காணுகின்றான். தன் செயலால் இந்நிறை ஒன்றுக்கொன்று பேதமுறுகையில் நோய்வாய்ப் படுகிறான். இப்பேதங்களின் குணங்களையும் நோய் மீறி அதனால் உயிர் மீளும், மீளாது என்ற நிலமையை யும், அதன் அவதிகளையும் நாள், கிழமை, நட்சத்திரம், தியதி முதலியவற்றை முறையாக இவ்வேடு விளக்குகிறது. தொல் லேடிகளை ஆராய்ந்து எழுதிய இந்நூல் மருத்துவத்துறை யில் ஈடுபட்டவர்களுக்கு முக்கிய கையேடு.

ஆசிரியர்.

பொருளடக்கம்

உ



மரண கண்டி (சுர நூல்)

காப்பு

ஆதியாம் குருவைப் போற்றி
அருளி மறை பொருளைச் சாற்றி
சோதியாம் இமையைப் போற்றி
சூட்சமா மருளை வாழ்த்தி
நீதியாம் அருளினாலே
நிணில் மனிதர்க்காக
ஆதியாம் முனிவர் சொன்ன
அவதியின் சுர நூல் காப்பே'' 1

கருத்து :- கலைகளுக்கு முதற்படியாய் நிற்கும் குருவை மனதில் நினைத்தும் சக்தியின் சிகரமாய்விளங்கும் இமயத்தை கரம்குவித்து வணங்கியும், எதற்கும் நீர்க்கமாயிருக்கும் இறையின் அருளை வாழ்த்தியும், சித்தர்கள் மொழிந்த மனித ஆயுளின்கால அளவை வரையறுக்கும் **மரண கண்டி** என்ற சுர நூலின் தத்துவத்தை இங்கு அறிய முற்படுவோம்.

வாதத்தால் வாதம் சேர்ந்தால் குணம்

வாதத்தில் காற்றணுகில்
மயக்கமும் கொளுத்தும் காணும்
சீதத்தால் சத்தி வேர்வை
இக்கிளும் உச்சிக் குத்து

போதற்ற கழிச்சல் தாகம்
புண்ணியமில்லை கண்டாய்
தீதற்ற அப்பு வாயுவை
தெரிந்துநீ அறிந்திடாயே 2

கருத்து :- வாதத்தில் காற்று சேருமாகில் மயக்கமும், கொளுத்தும் (பிடிப்பும்) காணலாம். சீதம் கண்டால் வாந்தியும், வியர்வையும், இக்கிளும், உச்சிக்குத்தும், கழிச்சலும், தாகமும் உண்டாகி அசாத்திய நிலையுறுவர். இங்ஙனம் தீரு விளைவிக்கும் கூட்டினுல் வரும் வாயுவின் தன்மையை அறிவீர்.

அறிந்து கொள் மூன்றும் ஐந்தும்
ஆனதோர் யேழும் பத்தும்
பரிந்துகொள் பதின்மூன்ருேடு
பதினைந்தும் பதினெட்டான
தெரிந்துகொள் கடின மிந்த
திசைகளில் அசதி காணில்
இருந்து கொள் மருந்தீயாதே
இருபத்திரண்டில் சாமே 3

கருத்து :- மேற்கூறிய தன்மையான நோயுற்ருேர் 3, 5, 7, 10, 13, 15, 18 நாட்களின் அவதிகளில் சுகம் பெறவில்லை என்ருல் நோய் கொடியது என அறியவும். பின் உடலில் அசதி காணும். இந்நிலையில் மருந்து தேவையற்றதாகும். ஏனெனில் 22-ஆம் நாள் மரணம் வந்தே தீரும்.

பித்தத்தில் பித்தம் சேர்ந்தால் குணம்

பித்தத்தில் தீயணுகில்
புலப்பமும் தலை விசர்க்கும்

சத்தியும் உச்சிக்குத்தும்
அசனமும் செல்லவொட்டாது
அந்தியும் தீப்போல் காயும்
அவுஷதமறிந்து செய்து
பத்தொன்றில் முறிக்காவிட்டால்
பதினெட்டில் மரணம் தானே. 4

கருத்து :- பித்தத்தில் சூடு அணுகில்வாய்புலப்பம், தலை வியர்த்தல், வாந்தி, உச்சில் உளைவு, தூக்கமின்மை, எலும்புகள் தீ போல் சூடேறுதல் முதலிய குறிகள் காணும். இதனை அறிந்து தக்க மருந்தைக் கொடுப்பாயாக. இம்மருந்தினால் பதினொன்றில் குணமேற்படாவிட்டால், பதினெட்டில் மரணம் விளையும்.

சிலேத்துமத்தில் சிலேத்துமம் கலந்தால் குணம்

சிலேற்பனத்தில் சிலேற்பனமானால்
சீரியே சன்னி உண்டாம்
மயக்கமும் தளர்ச்சை வியர்வை
மண்டையோடுச்சிக் குத்தும்
சலத்துடன் மலமும் சிக்கி
தாகமும் கபமும் மீறும்
சிரத்துடன் வலியும் தோன்றில்
சென்றிடும் சீவனும் தானே. 5

கருத்து :- சிலேத்துமத்தில் கபம் சேர்ந்தால் விரைவில் சன்னி உண்டாகும். மயக்கம், தளர்ச்சி, வியர்வை, தலையில் வலி, நீர்-மலக்கட்டு, மிக்க தாகம், உடல் முழுமையும் நோதல், கப வெளியேற்றம் முதலிய குறிகள் கண்டு மரணம் விளையும்.

சன்னிவாதம் வருவதை அறிவதற்கு

உற்றதோர் வெய்யிலில் நின்று வியர்வையோடு
உடனே சலத்தில் முங்கி குளித்திட்டாலும்
சுத்த நல்லெண்ணெய் தேய்த்து மூழ்கிவந்து
சுகம் பெற லீலை செய்திட்டாலும்
மெத்தவே புலிப்பருந்தி இரவு தனில்
மீள் பனியில் நனைந்திட்டாலும் குளித் திட்டாலும்
சற்றெனவே வியர்வையோடு தலைக்குத்துண்டாகும்
சன்னி வாத சுரமிதற்கு போதப்பாதே. 6

கருத்து :- வெய்யிலில் திரிவதனால் உடலில் வியர்வை தென்படும். அவ்வியர்வை உடலில் இருக்க, உடன் குளிர்ந்த நீரினில் குளித்திடுவதாலும், சுத்தமான எண்ணெய் தேய்த்து மூழ்கி வந்து மனமொத்து சிற்றின்ப லீலைகளில் ஈடு படுவதாலும், அதிகமாக புளிப்புப் பண்டங்களை உட்கொண்டு கடுமையான பனியில் இரவு வேளையில் நடப்பதாலும், அல்லது குளிர்ந்த நீரில் குளிப்பதாலும், உடலெல்லாம் வியர்க்க வியர்கக உலாவுவதாலும் தலைவலி உண்டாகும். இந்நிலையில் சன்னி வாத சுரம் வந்தடைகின்றது.

சன்னிவாத சுர அவதிகள்

தப்பாது மூன்றைந்து ஒன்பதேழு
தான் பதினொன்று பதிமூன்றப்பால்
செப்பாது பதினைந்து பதினெட்டான திசை
கடினமாய் இருபத்திரண்டு நாளாளே
ஒப்பாது அசாத்தியங்கள் இல்லையானல்
ஓகோகோ இருபத்தெட்டுமுதல் முப்பத்தாறில்
மெய்ப்பாக இச்சுரந்தான் மீழும் மீழும்
மெய்யிதென்று முன்னோரும் மொழிந்தவாறே 7

கருத்து :- இங்ஙனம் கொடிதான சன்னிவாத சுரம் ஏற்பட்டால் 9, 11, 13-ம் பின்னர் 15, 18-ம் மிக வருத்தமான நிலையில் 22-நாள் அவதிக்குப்பின், மருந்துகளினால் குண மாவதுண்டு. இந்த அசாத்திய சுரம் 28 முதல் 36-ம் நாட்களில் குணப்படும் தன்மையும் சிலர்களுக்கு கொண்டதாகும்.

சீத சுரத்தின் குணம்

இன்னங்கேள் சீத சுரம்
ஈளையுங் கமுமாகி
சென்னியும் உச்சிருத்தும்
சொருகிடும் கண்ணை மேலே
சன்னியும் வியர்வை மெத்த
உற்றவாய் புலம்பல் காணும்
வன்னியே மடக்கிக் கொள்ளும்
நாலிரண் டொன்றில் மரணமாமே 8

கருத்து :- சீத சுரத்தில் இளைப்புடன், சென்னிசிறுத்து கண்கள் மேலே சொருகும். சன்னி கண்டு, வியர்வை அதிகரித்து, வாய்புலப்பம் காணும். இந்நிலையுற்றோர் வருத்த முற்று 9-ம் நாளில் இறப்பதும் உண்டு.

கப சுரத்தின் குணம்

மலக்கபத்தின் சுரக்குணமே
கருதியே சொல்லக் கேளு
சிலுத்திடும் தேகமெல்லாம்
சினத்திடும் சேற்ப மோங்கி
கலைத்திடும் நாடியெல்லாம்
காற்று போல் பறந்து மோடி

வலுத்துடன் கபத்தில் மீறி
வந்திடில் மரணமாமே. 9

கருத்து :: மல கபத்தால் சுரம் கண்டால் உடலெல்லாம் சிலுத்துவிடும். சிலேத்துமம் மீறி கோபமுற்றிருக்கும். நாடி நடை மாறுபடும். கபததினால் சுரம் அசாத்தியப்பட்டு மரணம் விளையும்.

சிங்நு சுரத்தின் குணம்

சித்தர் கேளீர் சிங்நு சுரம்
சீறும் யிருமும் இளைப்பீழை
முற்றும் மூளைதனை யிறக்கும்
முனங்கும் உடலைதான் வரட்டும்
வற்றும் வயிறு கடுத்துளையும்
வலமுஞ் சலமும் கருகிவிடும்
பத்தும் யேழாம் நாளில் மரணம்
பறை தானடியும் பண்டிதரே. 10

கருத்து :- சிங்நுசுரம் கண்டால் கோபம் பொங்கிய இருமல், இளைப்பு, ஈளையைத் தருவிக்கும். மூளையின் சக்தி குன்றி, வாய் புலம்படும். குடல் வரண்டு, வயிறு வாடி கடுப்புடன் உளைவு காணும். சிறுநீரும், மலமும் கருகிச் சிறுக்கும் இதில் பதினேழாம் நாளில் மரணம் ஏற்படும்.

பித்த கபத்தின் குணம்

பித்தத்தில் சிலேற்பனமாகில்
பொறுமியே வாய்வு மீறும்
குத்திடும் உச்சி தன்னில்
குமட்டியே சர்த்தி வேர்வை

சுற்றிடும் சன்னி சீதம்
சூழ்ந்து தான் கபத்தில் மீறில்
இக்கிழும் விக்கல் தோன்றும்
யேகிடும் சீவன் தானே 11

கருத்து :- பித்தத்தில் சிலேத்துமம் சேர்ந்தால் வாயு விஞல் வயிறு உப்பும், உச்சியில் உளைச்சல் காணும். வாந்தி குமட்டலுடன் எழும். உடல் முழுமையும் வியர்க்கும், சன்னி சீதமுண்டாகி கபம் அதிகரித்து இக்கல், விக்கல் தோன்றி சீவன்பிரியும்.

வாத கபத்தின் குணம்

வாதமும் சிலேற்பனமாகில்
மருவிய தண்ணீர் போலே
தேகமும் குளிர்ந்து காணும்
சென்னியு முச்சிக்குத்தும்
ஏகிடும் பல்லும் பூட்டி
இசைக் கண்ணும் சொருகும் சன்னி
ஆகுமே பதின்மூன்றுக்குள்
அவ்வுயிர் மாளுந்தானே 12

கருத்து :- வாதமும் சிலேத்துமமும் சேர்ந்தால் உடல் முழுமையும் குளிர்ந்த நீர் போல் தாணுபபேறும். சென்னியிலும், உச்சியிலும் வலி காணும். மேல்நாடி, கீழ்நாடி பற்கள் கிட்டி, கண்கள் இருண்டு மேலே சொருகும். சன்னியுடன் இந்நிலை பதிமூன்று நாள் நீடித்து உயிர் பிரியும்.

நட்சத்திர அவதிகள்

சோதி சதயம் ஆயில்லியம்
சொல்லும் கேட்டை பூரமதும்
தீதாம் பரணி கார்த்திகையும்

செவவாய் சனி ஞாயிறு புதன் தனில்
ஓதும் நவமி தூவா தேசி
உரைப்பேன் அவிட்டம் பிறதமையும்
பேதமிவை களிற் சுரங் கண்டால்
பிரமன் வரினும் பிழையாதே. 13

கருத்து :- சோதி, சதயம், ஆயில்யம், கேட்டை, பூரம், பரணி, கார்த்திகை ஆகிய நட்சத்திரங்களிலும்—செவ்வாய், புதன், ஞாயிறு, சனிக்கிழமைகளிலும் மற்றும் நவமி, துவா தேசி, அவிட்டம், பிரதமை முதலிய நாட்களிலும் சுரம் கண் டால் தீமையாகும். நிச்சயம் மரணம் நேரும்.

வன்னியே அசுவதியில்
வந்திடும் சுரம் எட்டாம் நாள்
உன்னியே விடாதாகில்
ஒன்பதில் சொல்லக் கேளு
சன்னியும் வலியும் தோன்றி
சலிப்புடன் பத்து நாளில்
எண்ணியே எழுந்து மோதி
உலகினில் மரணந் தானே 14

கருத்து :- அசுவதி நட்சத்திரத்தில் கண்ட சுரம் எட்டு நாளில் நீங்காமல் தொடர்ந்தால் ஒன்பதாம் நாளில் சன்னி யும், வலியும் தோன்றி, வருத்தம்மீறி பத்தாம்நாளில் மரணம் நேரிடும்.

கொஞ்சிடும் குழலிஞளே
குலாவிய சுரத்துக்கெல்லாம்
மிஞ்சிடும் தாகம் மீறி
மிகுந்திடும் சர்த்திவேர்வை

வஞ்சியே உத்திரட்டாதி
வந்திடுஞ் சுரங்கள் தானும்
துஞ்சிடும் பரணி திங்கள்
தொல்லுலகிலறியும் வாறே. 15

கருத்து :- இங்ஙனம் ஏற்பட்ட சுரம் நிலைத்து நிற்கையில் தீராத தாகம், வாந்தி, வியர்வை கண்டு, உத்திரட்டாதி நட்சத்திரம் வருகையில் வருத்தத்தையும், பரணி நட்சத்திரத்தில் தொல்லையும் வருமென்பதை இளமை நிறைந்த பெண்ணனங்கே அறிந்திடுவீர்!

வாறுகேள் மயிலின்னே
மருவிய சுரத்துக்கெல்லாம்
கூறுகேள் துடித்து நாடி
குப்பென கபத்தை மேவி
சீறிய சிலேற்பனத்தில்
சென்றது அணையுந்தீயை
தேறு தீயணையும் போது
சீவனும் போகுந்தானே. 16

கருத்து ;- இங்ஙனம் சுரத்தின்போது நாடி படபடத்து விரைவில் கபம் மீறி, சுரம் சிலேத்துமத்தில் சேர்ந்து அசாத்திய நிலையுண்டாகி மரணம் விளையும் என்பதை அறிவாய் பெண்ணே!

போச்சப்பா கண்சிவக்கும் மெய்யரும்
புத்தியெல்லாம் மதிமயங்கும் வாய்நீர் காணும்
ஆச்சப்பா முகஞ்சீடு கபமும் விக்கல்
அப்பனே தேகமெல்லாம் குளிர்ச்சையிக்கிள்
மூச்சப்பா பலவிதமாய்க் காட்டுந் தேகம்
முகம் வெளுக்கும் பல்கடிக்கும் அறிவுமெத்த

யேச்சப்பா போகுமிது பதினெட்டுக்குள்
எழுந்துடல்விட்டே உயிர்போகும் பாரே. 17

கருத்து :- சுரத்தின்போது கண் சிவந்து, உடல் தளர்ந்து. அறிவு மயங்கி முகம் கடுத்து, வாநீர். ஊறும். கபமும், விக்கலும் காணும். உடல் குளிர்ந்து இக்கிளுண்டாகும். உடல் பலவாறு தோன்றி, முகம் வெளிறி, பற்களை நெறு நெறுக்கும். நினைவு மாறும். இந்நிலைமை அடைந்தால் பதினெட்டு நாட்களுள் மரணம் நேரும்.

கண்டாயோ விழிமாதே சொல்லக் கேளு
காதடைக்கும் கன்னமொட்டும் கபமும் தோன்றும்
விண்டாயோ சவ்வாடை நாலுஞ் சொன்னேன்
விறுதாவாய் நாடியெல்லாம் விட்டுப்போகும்
சண்டாள விஷம்போலே தண்ணீர் கேட்கும்
சங்கையுன் முப்பத்திரண்டுக்குள்ளே
வண்டாளும் குழலார் கை தண்ணீருண்டு
வையகத்தில் மரிப்பதுவுந் திண்ணமே. 18

கருத்து :t சுரத்தின்போது காதடைத்து, கன்னம் ஒட்டி உலரும்; கபம் மீறும்; நாடிகள் பிசகும்; தாகம் அதிகரிக்கும். இப்படி 32 நாள் [illegible]ந்தி தன்கையினாலேயே தண்ணீரை அருந்தி, உயிரை விடுவார் என்பதை இனியமாதே நீ அறிவாய்!

வன்மையாய் ஆடியாடி அலையும்பாரு
வாஞக வுள்ளில் மெத்த குளிர்ச்சையுண்டாம்
பழமையாம் நாக்கதனை உள்ளேவாங்கும்
பகலோனைப்போல் கண்ணை யுருட்டிப்பார்க்கும்
கீழிமை நுனிப்பல்லும் கருத்துப்போகும்

கீழ்மூச்சும் தப்பிவிடும் மேல்மூச்சாகும்
இளமையாம் மேல்மூச்சு விக்கல் வந்து
எழுந்தவுடல்வுட்டு உயிர் போகுந்தானே. 19

கருத்து :- மேலும் இங்ஙனம் சுரமுற்றோர் ஆடி, ஓடி அலைந்து திரிந்தாலும், உடலில் அதிகத் தனுப்பேறி நாளை உள்ளிழுக்கும். சூரியனை ஒத்து கண்களை உருட்டி விழிப்பர். இமையின் கீழும், பல்நுனியும் கருக்கும். உள் மூச்சுமேல்மூச்சு போல் பறியும், மேல் மூச்சு சக்தியற்று. விக்கல் வந்து உயிர் பிரியும்.

இருக்கும் படுக்கும் எழுந்திருக்கும்
இளைத்தே மூச்சுதனை வாங்கும்
அடுக்கும் அடுக்காய் கண்விழிக்கும்
அபானம் தன்னை தானடைக்கும்
சொடுக்கு சொடுக்காய் பல் கடிக்கும்
சுவாசமும் முந்தி மேல்வாங்கும்
திருக்கு திருக்காய் விக்கல் வரும்
தீரும் நாழிகை பத்தாமே. 20

கருத்து:- சுரத்தின்போது, அமரவும், படுக்கவும், எழுந்திருக்கவுமாக அமைதியிழக்கும். உடல் இளைத்து மூச்சு வாங்கும். கண் பருமனாய் விழித்து விழித்துப் பார்க்கும் தன்மை காணும். மலம் கழியாது ஆசனவாய் அடைக்கும். பற்கள்விடு விடுவென அடிக்கடி கடிக்கும். மேல் சுவாசமுடன், விக்கலும் கண்டு உடலை வருத்தும். இந்நிலையில் நோயாளி 10 நாழிகைக்குள் மரணமடைவான்.

பல்லும் நாவும் கருத்திருக்கும்
படபடவெனவே எழுந்திருக்கும்

அல்லல் மிகவே தானுண்டாம்
அடுத்ததை மூச்சுப பறியாது
சொல்லும் சுவாசம் மேலிளைக்கும்
சுருக்காய் பருவிழி தோற்றுவிக்கும்
நில்லுமிகக் குணமுடன் மரணம்
நினைவாய்ப் பாரும் பண்டிதரே. 21

கருத்து :. பற்களும், நாவும் கருமை நிறமுண்டாகும். பதறிப்போய் திடீரென எழுந்திருப்பர். பல தொல்லைகள் பட்டவரின் நிலையடைவர். மூச்சுத்தினறலுடன் சுவாசம் வாங்கும். கண்விழிகள் பெருகி நிலைத்து நிற்கும். இக்குறிகள்கண்டாலும் மரணம் விளையும்.

குன்றும் மேனி மினுமினுத்து
கூம்பில் பரிதாபமும் சர்த்தலுமாம்
மன்றும் தேகம் நொந்தெழுந்து
மசக்கம் வேர்வைநீர் தாகம்
குன்றும் மூன்று நாடிகளும்
கடுவாய் போலே கறித்திருக்கும்
ஒன்றுபோலே குழறி விடில்
ஒன்பதாம் நாளில் மரணமிதே. 22

கருத்து :- உடல் குறுகி, மினுமினுப்பாய்க் காணும் கூம்பில் எரிவுகண்டு வருந்துவர். வாந்தி, உடல் நோவு, அறிவு மயக்கம், நாவரட்சி, தாகம் காணும்; வாத பித்த-கப நாடிகள் தளரும் கடுவாயின் எழுச்சியும் காணும். இந்நிலை ஒன்பது நாள் மாறுது நீடிப்பின் மரணம் நேரும்.

சிலேற்பனம் தண்ணீர் போலே
சென்றது நாவிலேறி

தலைக்கனம் அடைத்துக்கொண்டு
தயங்கிய மூச்செரியும்
சிலுத்துடல் குளிர்ந்து காணும்
தேகமுஞ் சிரசும் வேர்வை
வலித்திடும் கபம் கண்ட பஞ்சாம்
மயக்கமும் யிக்கிளாமே 23

கருத்து :. உடலில் பரவிய கபம் நாவிலேறி தண்ணீர்த் தாரையானது சிரசை அடைந்து தலைக்கனத்தைத்தரும், மூச்சுவிட இயலாமல் தயங்கச் செய்யும். உடல் முழுமையும் தணுப்பேறி, வியர்வையுடன் நோவையும் தரும்-கபம்மிகுந்து வலிப்பைக் கொடுக்கும். கண்மயங்கி, மயக்கமும், இக்கிளும் வந்தடையும்.

வெண்ணெய் போல் உருகி சிலேற்பனம்
வேர்வை கண் பஞ்சதாகும்
கண்ணரைக் கண் மயங்கும்
கருதியே காதடைக்கும்
வண்ணமாய் கபமும் யிக்கிள்
வந்திடும் சுவாசமெல்லாம்
திண்ணமாய் நாக்குள் வாங்கும்
தீர்ச்சையாய் மரணந்தானே. 24

கருத்து :- கபம் வெண்ணெய் உருகினாற்போல் உடல் எங்கும் பரவி வியர்வை கொட்டும். கண்கள் பஞ்சடைத்து: அரைக்கண்ணுய் மயக்கமுறும். காதடைக்கும். மிக்க கபமுடன் இக்கிளும் வந்து மூச்சு வாங்கும். இந்நிலையில் மரணம் நிச்சயம் நேரிடும்.

கன்னமும் ஒட்டிப்போகும்
　　கபமுடன் பல்லும் பூட்டும்
இன்னவும் சிலேற்பன சீதம்
　　இக்கிளும் விக்கலாகும்
வன்னியும் அடிக்கிக்கொள்ளும்
　　வளர்ந்திடுஞ் சிலேற்பன வாதம்
சொன்ன நாள் மூன்றுக்குள்ளே
　　சீவனும் பிரியுந்தானே. 25

கருத்து :- இரு கன்னங்களும் ஒட்டி உலர்ந்து போகும். கபம் மேலிடும். மேல் கீழ்வாய் பற்கள் நெருக்கமாய் பூட்டி விடும். சிலேற்பன சீதம், இக்கிளும், விக்கலுமாய் மாறும். செயலும் தடைப்படும். சிலேற்பனவாதம் வளர்ந்து மூன்று நாளில் நோயாளியின் உயிர் பிரியும்.

தானான சிரசதிலே கபமுமாகி
　　தலைவலிக்கும் சென்னி வெட்டும் உச்சிக்குத்தும்
வானான சுரங்காயும் வேர்வையாகும்
　　மாருத யிருமல்கபம் மயக்கமாகும்
வானான குலைமார்பில் கொளுத்துநோவாம்
　　உடலெங்கும் தானுளைந்து குளிர்ச்சையுண்டாம்
தானான இக்குணத்தை கருதிப்பார்த்து
　　கண்டூஷம் தைலம் தல்லிப்பிழிவு செய்யே. 26

கருத்து :- தலையிலுள்ள கபக்கோளத்தில் கபம்மிகுந்து தலைவலி, சன்னிவெட்டு, உச்சியில் கடுமையான குத்து உளைச்சல், உடல் முழுவதும் வியர்வை, அணல், சுரம் இவை தொடர்ந்து வருத்தும். இருமல் மார்பில் நோவு, எரிச்சல் உடல் முழுமையும் உளைச்சல், குளிர்ச்சை முதலியனகாணும்.

மருத்துவ நோக்குடன் சிர் தூக்கி, கண்டுஷம் தைலம், தல்லிப் பிழிவு முதலியவற்றை நோயினார்க்குக் கொடுக்கவும்.

செய்யப்பா செந்தூரம் குளிகை பற்பம்
சிறப்பான கட்டுவகை கபக்குழம்பு
வையப்பா வாதமுடன் சிலேற்பன கோபமாறி
வளர்ந்து பித்தராசன் வர்த்திப்பான் பார்
எய்யப்பா பொழுதடைந்தாலிருளுமாச்சு
என்றது போல் ஒளி குறைந்தாலுயிருளுமாச்சு
மெய்யப்பா ஆள் வறக்கும் வெளிவிடாதே
மேலான நூலிதுதான் விளம்பினேமே. 27

கருத்து :- மேலும், செந்தூரம், குளிகை, நீற்றுவகைகள், காயக்குழம்பு போன்றவற்றையும் வகையறிந்து தரவும். வாதமுடன் கபம் சேர்ந்து கோபம் மிகுந்தால் பித்தம் வர்த்திக்கும். அதற்குரிய மருத்துவம் செய்யவும். சிகிச்சையின்றி இந்நிலையில் ஒரு நாள் விட்டுவிட்டால் உடல் நிலை கட்டுக்கு மீறி உயிருக்கு ஆபத்து விளையும், இது அரியபொருளுடைய மருத்துவ நூலின் கருத்தாகும்.

விளம்பினேம் நாடிகண்டு குணங்கள் கண்டு
வெய்யில் கண்டு மழைகண்டு காற்றுகண்டு
குளம்பினேம் நோய்கண்டு மருத்துவம்கண்டு
குணங்கண்டு சுத்திமுறைதான் கண்டு
சிளம்பினேம் வேறென்றின் முறிவுங்கண்டு
செய்பாகம் கைபாகம் இடமுங்கண்டு
விளம்பினேம் அவுஷதங்கள் கொடுக்குமந்த
வைத்தியன்மேல் பாவம்வந்து விளைந்திடாதே 28

கருத்து :- நோயினரைப் பிடித்துள்ள நோயின் குணங்களையும் அந்நேசமயம் சரியும் வெய்யோன் வெப்பம், வீசும்

காற்று, பெய்யும் மழை ஆகிய சந்தர்ப்பங்களைக் கண்டும், நோய்க்கேற்ப ஊட்டும் மருந்துகளின் பக்குவபாகமறிந்தும், செய்முறைகள், பேதா பேதங்கள், கைபாகத்திட்டங்கள் முதலியவற்றையும் கண்டுணர்ந்து முறையான சிகிச்சையை சீரிய கருத்துடன் மருத்துவர் கையாண்டால் நற்பலன் கிட்டுமென்பது திண்ணம்.

ஈடொன்று வந்துற்று சுரங்கலெல்லாம்
இதலிடையே பாதி நாட்கட்குள்ளே
தீரென்று இறங்காமல் மெல்லமெல்ல
தீரும்பாட்டா லதுகடினம் பதனம் பாரு
வீடென விளக்கனைய விஷயம் நன்றாய்
விபரமுடன் பார்த்தறிந்து சாத்தியாசாத்தியங்கள்
கூடென்ற அவுஷதங்கள் கொடுத்தாயானால்
குற்றமில்லை வைத்தியன் மேல்குறியைக்
காணேன். 29

கருத்து :- உடலில் வரும் சுரத்தின் கடும் வெப்பம், ஒரு சில நாட்களில் சிறுகச்சிறுகத் தணியாவிடின், அச்சுரம் கடுமையானது எனஅறியவும். நோயின் சாத்திய, அசாத்திய நிலைகளையறிந்து அதனதற்கேற்ற மருந்துகளைக் கொடுக்க நோய் நீங்கும்.

காணப்பா பிணியாளி தனக்கு யின்னும்
சுறுக்குடனே சிவப்பு பலவண்ணப்பட்டு
தோணப்பா பச்சை நீலத் துயில்கள்
தூக்கமது குளிர்கபத்தில் கொடுக்கலாகா
வேணப்பா வெண்துயில்தா னெங்கும் போத்தி
வெண் கடம்பு மெத்தைதனில் படுக்கை நன்றாய்
ஆணப்பா யின்னூலில் விவரித்துச் சொன்னேன்
அப்பனே அறிவேன் நானின்றும் பாரே 30

கருத்து :- நோயினர் சிவப்பு, பச்சை, நீல நிறங்கள் உடைய் ஆடைகளை அணியக்கூடாது வெள்ளை நிறத் துணி யுடுத்தியும், போர்த்தியும், கடம்புமரக் கட்டிலில் படுத்திருத்தலும் நலம் பயக்கும்.

பாரப்பா பச்சைமீனிறச்சி கோழி பழங்கறி சோறு
பழங்கஞ்சி பருப்பு முட்டை
சாரப்பா சவ்வாது புனுகுவாடை சந்தனம்
பன்னீர் யிளநீர் பாலுநெய் தேங்காய்
போமப்பா பொரிகடலை தோசை மாங்காய்
பிட்டு பலகாரம் பால்பழம் பாயசங்கள்
சேரப்பா சுகலீலை இவைகளெல்லாம்
சுரந்தனுக்கு அருந்திட்டால் தோஷம் என்னே 31

கருத்து :- மீன், இறைச்சி, கோழி, மாமிசம், பழைய கஞ்சி, முதல் நாள் கறி, பருப்பு, கோழி முட்டை இவற்றை உட்கொள்ளுதல், புனுகு, சந்தனம், அத்தர், பன்னீர்முதலிய வாசனைப் பொருட்களைக் கையாளுதல், பால், நெய்,தேங்காய் இளநீர், நெல்பிட்டு, பழம், இனிப்பு வகைகள்,முதலியவற்றை உட்கொள்ளுதல், சிற்றின்பத்தில் ஈடுபடுதல் முதலிய செயல் முறைகள் சுரமுற்றோருக்கு தீமை விளைவிக்குமாகவே இவற்றை நீக்குதல் வேண்டும்.

என்னவே யின்னூலை எளிதென்று எண்ணிடாதே
இப்புவியிலிது போலே இல்லையில்லை
முன்னமே பெருநூலாய் மெத்தச் சொன்னேன்
முற்றுவே வுணர்ந்து இதைச் சுருக்கியானும்
வன்மையான சரசுவதியும் கணபதியும் போற்றி
வடிவேலற் முருகனையும் வணங்கிப் போற்றி

அன்னமுறும் அகத்தீசர் வோதி வைத்த
அவதிசுரம் முப்பத்திரண்டும் முற்றே. 32

கருத்து :- இத்தகைய பொருள் நிறைந்த இந்நூல் அரிய படைப்பாகும். பல நூற்களை ஆதாரமாய் கற்றுணர்ந்து எழுதியதாகும். கலைக்கு அதிபதியான சரசுவதியையும், அருளுக்கு இருப்பிடமான கணபதியையும், வடிவேலை ஆயுதமாய்த் தாங்கியிருந்து காத்தருளும் திருமுருகனையும் மனதில் நிறுத்தி அடிபணிந்து அவதிசுரம்முப்பத்திரண்டும் நிரம்பிய முனிவர்க்கெல்லாம் தலைவரான அகத்தீசர் திருவாய்மால் அருளி உருவாக்கித் தந்துள்ளார் என்று அறியவும்.

(முற்றும்)

சித்த மருத்துவ பிரசுர வேறு வெளியீடுகள்

(பண்டித ரத்ன : S. சிதம்பரதாணு பிள்ளை
B. A., B. Com., LL. B., M. I. P. S. (Lon) எழுதியது)

மனித உடல் கூறுபாடு விளக்கம் [விலை ரூ. 4.]

பல்லாண்டுகள் பழமை நிறைந்த நூல்களையும் இன்றைய நாளில் ஆங்கிலத்தில் வெளியான உடல் கூறுபாடுகளை விளக்கும் பல நூல்களை பார்வையிட்டும், தமிழ் பாணிக்கு தக்கவாறு உருவாக்கிய இந்நூல், எல்லா மருத்துவ துறையினருக்கும், மாணக்கர்களுக்கும் சிறந்தவகையில் பயன்படும்.

இப்புத்தகத்தில் மனித உடலில் காணும் எலும்புகள் அவைகளை ஒட்டிய சந்திபந்தங்கள், தோல், மயிர், சதை இவற்றோடு ஓடி பரவும் நரம்புகள், நாளங்கள், இன்னும் ஐம்பொறிகள், மார்பு, வயிறு முதலிய பாகங்களை அக்கு வேறு ஆணிவேறாக சீரிய முறையில் சித்தரித்து, அவைகளின் நிலையங்கள், தொழில்கள், குணங்கள் போன்றவற்றை விளக்கப்படுகின்றன. நூலகங்களிலும், படிப்பகங்களிலும் அவசியம் இடம் பெறல் மக்களுக்கு மிக்க பலனளிக்கும்.

ooo ooo ooo

மாதர் மருத்துவம் [விலை ரூ. 3.]

அடைவதற்கரிய பெரும் பொருள் மகப்பேறு. மற்றெல்லா பாக்கியங்களை ஒருவன் அடைந்திருந்தும், மகப்பேறு கிடையாது போனால், அவன் வாழ்வு என்னே பயன் ! இக்குறைக்கு முக்கியக் காரணம் என்ன ?

பெண்ணின் உடலில் காணும் சில பழுதுகளே பேறுக்கு தடைவிளைவிக்கின்றன. இதை கற்றுணர்ந்து, அனுபவப்படி

கண்டு தேர்ந்து, உருவாக்கிய இந்நூலில் பெண்ணின் பருவ நிலை, இன உறுப்புகளின் நோய்கள், கருவை வளர்க்கும் வழிகள், கடைபிடிக்கும் மருத்துவ முறைகள் போன்றவற்றை செவ்வன சித்தரித்து வாசகர்கள் அறிவை விலாசப்படுத்த பல நயங்களை தந்துள்ளார் ஆசிரியர்.

ஒவ்வொரு பெண்மணியும் கண்ணென காத்து, பின் பற்றும் அரிய நூல். இல்லந்தோறும் இந்நூல் இருத்தல் வேண்டும். எல்லா மாதர் கழகங்களில் இப்படைப்பு இடம் பெறுதல் நன்று.

ooo ooo ooo

குழந்தை மருத்துவம் [விலை ரூ. 1-50]

பெரியவர்கட்கு உடல் நலம் குறைந்தால், எடுத்துக் கூறும் சக்தி இருக்கின்றன. ஆனால், வாய்திறந்து பேச இயலாத பச்சிளங் குழந்தையின் உடல் நலயின்மையை எங்ஙனம் காண்பது ? குணங்கண்டு தெரிந்திடலாம்.

இந்நூலில், குழந்தைகளுக்கு வரும் நோய்கள், நோயின் குணங்கள், மருத்துவம் போன்றவற்றை அனுபவத்தையும், ஏட்டுச் சுவடிகளின் நயத்தையும் கருத்தோடு, மருத்துவ பண்போடு எடுத்தாளப்படுகின்றன.

இளம் தம்பதிகளுக்கு கூறும் இனிய நல்லுரைகள் இவ்வேடின் தனிச்சிறப்பு. இளம் தாய்மார்களுக்கு இந்நூல் முழுக்க முழுக்க ஒரு வரபிரசாதமாகும். குழந்தை நலனுக்கு கருவூலமாகும். இல்லம் தோறும் இடம் பெறல், மருத்துவர் துணை இருப்பதுபோலாம். பரிசு வழங்க சிறந்த நூல். நூலகங்களில் அவசியம் இடம் வகிக்கும் அரிய ஏடு.

ooo ooo ooo

காமாலை நோயும் மருந்தும் [விலை 75-காசு]

காமாலை நோயின் குறிகளை துணிந்து, வரும் காரணங்களை தெளிந்து, அதைத் தீர்க்கும் மருத்துவ பாகங்களை

அழகுற விளக்கும் நூல். காமாலை நோய்களின் பெயர் வகைகள், குணங்கள் போன்றவற்றை சித்தரித்து, வாசகர்களுக்கு எளிதில் புரியும்படி வழிவகுக்கிறது.

அடையார் ஆரோக்கிய ஆசிரம நிர்வாகத்தார்கள், "Kamalai Noyum Marundum", is a timely publication, indeed, and deserves circulation in other languages too" என புகழ்ந்து, ஆசிரியருக்கு, PANDITHA RATNA என்ற பட்டத்தைச் சூட்டியுள்ளார்கள்.

ooo ooo ooo

கருவின் நிலைகள் [விலை ரூ. 1]

ஆண் பெண் கூபகங்கள், இன உறுப்புகளின் இயல்புகள், இந்திரிய குணங்கள், இயற்கைக்கு மாறான சிற்றின்ப கேடுகள், வரும் நோய்கள், நன் நடத்தையின் அடிப்படைகள், தாம்பத்திய வாழ்க்கையின் இரகசியங்கள், இன்பங்கள் இவற்றை அறிவுறுத்தி, நல்வாழ்க்கைக்கு வழி காட்டி, வருங்கால மனித இன அபிவிருத்திக்கு வழிவகுக்கும் சிறந்த நூல்.

ooo ooo ooo

வர்மாணித் திறவு கோல் [விலை ரூ. 1]

வர்மாணி என்றால் என்ன? என்பதின் விளக்கத்தை முதற்கண் அறிவுறுத்துகிறது.

மனித உடம்பின், உயிர் நிலையங்களில் மாத்திரைக்கு மிஞ்சி அடி, உதை, தல்லல் போன்ற தாக்குகள் நேராகவோ மறைமுகமாகவோ, படுமிடத்து வர்மம் ஏற்பட்டு, அதனால் உடல் நலம் குன்றுகிறது. இப்பதிப்பை அடங்கல் அல்லது ருந்தால் சீர்படுத்த வர்மாணி மருத்துவம் வழிவகுக்கிறது,

வர்மாணி மருத்துவ மாணுக்கர்களுக்கும் மருத்துவர்களுக்கும் பெரிதும் பயன்படும் அரிய மருத்துவ நூல்.

" The Mail " in its review dated June 25, 1969 commented, "This is a key to the treatment of traumatic injuries to muscles, bones and nerves etc., in the human body according to the Siddha System of medicine......."

'The Hindu' in its review dated. April 13, 1969 stated, " In the preface, the auther gives a description of " VARMANI THIRAVUKOL ". In dealing with the subject proper, the auther has given the treatment of certain injuries concerning varmams. This book will be useful as a reference work for "Varma Vaidyars".

ooo ooo ooo

மனித மர்மச் சாவை கண்டுபிடிப்பது எப்படி ?

(அகால மரண நூல்) [விலை ரூ. 3]

தமிழ் மருத்துவ சட்ட விகார தொகுதிக்கு முதல் படைப்பாக வந்துள்ள இந்நூல், மருத்துவம், சட்டம், காவல் போன்ற துறையினருக்கு இன்றியமையாதது.

அகால விதமாய் விளைந்த மரணத்தின் இலக்கணத்தை சித்தரிக்கிறது. தண்ணீரில் விழுந்தோர் நசுக்கிக் கொல்லப் பட்டோர், தூக்கிச் செத்தோர், தகாத புணர்ச்சியாலும். சவ்வீரம், கண்ணாடி பொடி, கவுரி, ரச கற்பூரம், அபின், கஞ்சா, சாராயம், அரளிவேர், ஆதனம்பால் பாஷாண பொருட்கள், திராவகம், நெறிவிஷம் முதலியவை உட் கொண்டு இறந்தோர், கற்பழிக்கப்பட்டும், கருவழிக்கப் பட்டும், பாம்பு கடித்தும் இதுபோன்ற எண்ணற்ற காரணங் களால் மாண்டோரின் குறிகளைப்பார்த்து இறந்த காரணத்தை தீர்மானிக்க உதவுகிறது.

" THE HINDU " IN ITS REVIEW DATED 31—3—'68 stated "This book.........is a good treatise on' Toxicology and Medical Jurisprudence......It is written in an analytical manner and can serve as a text book for the students of Indian Medicine. The book deals with the various causes and circumstances of unnatural deaths and their signs and symptoms. On the toxicology side, causes of poisoning due to caustics, incompatible articles of food and their treatmet are vividly explained. The book gives easy reading and is easily followed."

ooo ooo ooo

பசு தரும் ஆரோக்கியம் [விலை ரூ. 1]

" பசு தரும் ஆரோக்கியம் " என்ற இந்நூல், பசுவின் பால் வகைகளையும், நீர், மலம், கொம்பு, குளம்பு, ரோமம், எலும்பு, ரத்தம், கோரோசனை போன்ற பலவிதப்பொருள்களை மருத்துவ நோக்குடன் ஆழ்ந்து ஆராய்ந்து, அதனால் நம் ஆரோக்கியத்தை எங்ஙனம் காக்கமுடியும் என்னும் அரும் பொருளை, அனுபவத்தையும், அறிவையும், தொல்லேடுகள் உதவியால் சீர்தூக்கி சித்தரிக்கிறது.

மருத்துவர்களுக்கும் மற்றுமுள்ள எல்லா மக்களுக்கும் மிக்க பயன்தரும் என்பது உறுதி.

The anthor Sri S. Chidambarathanu Pillai has been awarded with the title 'VIDYAA RATNAA' by Aayur Aiswarya Aarogya Aasramam, Adayar, Madras-20 on 26-1-1959......"as his reserch work on the real value of cow products, according to ancient Siddhas, is worth it's weight in gold. "

சித்தர் குறுநூல் **[விலை ரூ. 3-00]**

" நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம் "
என்பது உண்மையான பழமொழியானாலும், அப்பேர்பட்ட வாழ்க்கை இயற்கையில் கிடைப்பது அரிது. மானிட பிறவி எடுக்கும்போதே நோய்களும் கூடவே பிறக்கின்றன. இந் நோய்களை சரிவர மருத்துவம் செய்து, பிறப்பின் பயனை நாம் அடைவதுதான் மனிதாபிமானம்.

இந்நூல், சிறுவர் முதல் பெரியோர்வரை உடல் நலம் உயரிய முறையாக பன்னெடுங்காலமாக நம் முன்னோர்களால் கையாளப்பட்டு வந்த கைகண்ட மருத்துவ முறைகளை சித்தரிக்கின்றது.

இதன் கண் விளக்கப்படும் மருத்துவம் மிக எளிமையாக வும், பயன் நிறைந்தவையாகவும் இருப்பதை யாவரும் ஒப் புக்கொள்வார்கள் என்பது உறுதி.

இந்நூலின் பொருளை எல்லா இல்லத்திலும் கையாளுத ல். ஆண், பெண் இருபாலருக்கும் மருத்துவ அறிவும், பண லாபமும், தன்னம்பிக்கையும் பிறரைத் தேடி மருத்துவம் பெறாத தன்மையும் உண்டாகும். அனுபவ நூல் பொருள் நயம் சொறிந்தது.

oo oo oo

நீர் பாய்ச்சல் நோய்களும் விளக்கமும்

[விலை ரூ 1-00]

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம், சிரசில் அமைந்துள்ள ஐம்பொறிகளில். கண், மூக்கு, செவி, வாய் போன்ற முக்கியஉறுப்புகள் செம்மையாயிருப்பதின் நிமித்தம் மனிதன் நலமாகக் காணப்படுகிறான். இப்பொறிகள் பலவித காரணங்களால் எண்ணற்ற நோய்களுக்கு இடமாகி, மனிதன் துயருறுவதை நாம் பார்க்கிறோம். நோய்க்கு சின்ன மாக இவ்வுறுப்புகளிலிருந்து நீர் வடிகிறது. தொடர்ந்து பல தொல்லைகளும் வருகின்றன.

இந்நூல் கண், மூக்கு, செவி, வாய் இவைகளிலிருந்து நீர் வடிதலின் காரணங்கள், அதன் தன்மைகள், அதனுல் ஏற்படும் தொல்லைகள் இவைபோன்றவைகளை முதற்கண் விளக்கி, பின் அவைகளுக்குரிய மருத்துவ பாகங்கள், எண்ணெய் வகைகள், குளிகைகள், புகைகள் உள்ளுக்கு ஊட்டும் நெய்வகைகள் முதலியவற்றை அனுபவபூர்வமாய் அடுக்கடுக்காய், பல்லாண்டுகள் பயனடைய ஏடுகளின் சிறப்பறிவின் நுணுக்கம் துலங்கிட அறிவுறுத்தும், ஆராய்ச்சி நூலாக திறம்பட படைத்த இவ்வேடு மருத்துவ மாமக்களுக்கும், ஐம் பொறிகளின் மருத்துவத்தைப் பயிலும் மாணுக்கர்களுக்கும் ஏனைய பொது மக்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்.

oo oo oo

மஞ்சளின் மருத்துவ மகிமை [விலை ரூ. 1-00]

உள்ளத் தூய்மைக்கும், உடல் தூய்மைக்கும். மற்றுமுள்ள மங்கல சிறப்புக்கும் சதா உபகாரப்படும் அரும் பொருள் மஞ்சள்.

மருத்துவ கண்ணேட்டத்துடன் மஞ்சளின் குணுதிசயங்களை சிந்திக்க, இது மனித நல்வாழ்க்கைக்கு சொல்லரியா வகையில் பயனுள்ளதாய் இருக்கின்றது. இந்நூலில், மஞ்சளின் பேர்வகைகள், பொதுகுணங்கள், இன்னும் அதன் வேர், தண்டு, தோல், இலை, தழை, பூ, காய் இவைகளின் பச்சை, கிழாயம், சுட்டது, கரி, வாற்று, உப்பு போன்றவைகளின் மருத்துவநயங்கள், தீர்க்கும் நோய்வகைகள் போன்றவற்றை சீர்தூக்கி நயம்பட, பயன்பட எடுத்துக் கூறப்பட்டுள்ளன. வாசகரின் அறிவுக்கு இனிய விருந்து படைத்து, சிந்தைக்குத் திகட்டாத பரபரப்பை ஊட்டும் ஆராய்ச்சிப்படைப்பு இது.

கொங்கையின் இரகசியம் [விலை ரூ 2 50]

ஆண்களுக்கு எத்தனை கம்பீரமோ, அத்தனைக்கு பெண்களுக்கு மார்பாகங்கள் அலங்காரமாகும்.

பெண்களின் மார்பகங்களின் சிறப்பை அன்றைய காவியங்கள் வானளாவ வர்ணித்த. இன்றைய சமூகப்படைப்புகள் புகழ்கிறது. நாளைய விஞ்ஞான பேருலகும் உயர்வாக கருதும் ஏன், மனித இனமே இம்மண்ணில் உள்ளளவும், இப்பெண் சிறுப்பை மெச்சிப் போகும் என்பதில் ஐயமில்லை.

இதுகாறும் வெளிவந்த எண்ணற்ற நூல்கள் கொங்கையின் சிறப்பை கோவைக்கனி எனவும், மாங்கனி எனவும், மாதுளம் பழமெனவும் அழகுற பற்பல சிறப்புக்களை ஈந்து கொங்கையின் ரசத்தை அமிர்தமாயைப் பொருளாய், இச்சைக்கு போதையூட்டும் அங்கமாய் மேற்கொள்ளக் கூறினவே தவிர, கொங்கைகளின் பிரிவுகளென்ன, பண்பென்ன இயல்பென்ன என்று துருவி ஆராய்ந்து, விஞ்ஞான அறிவை மக்கள் கருத்துக்கு விருந்துப் படைக்கவில்லை. அக்குறையை நிவிர்த்திக்கவே இப்படைப்பு!

எண்ணிறைந்த தொல்லேடுகளையும், காவிய சிறப்புகளையும் பல்லாண்டுகள் அலசிக்கற்று, பெண்களின் மாண்பை, அவரவர் மார்பாகங்களொடு நிறைபோட்டு ஆழ்ந்து, ஆராய்ந்து, பின் திட்டம் தீட்டி, பெண்குலமென்ற தளத்தில் நான்கு வகை பெண்களின் பாகுபாடுகளை அடிக்கல்லாக அமைத்து, அதன்மீது பதினாறு கொங்கைப் பிரிவுகளை தூண்களாய் நிறுத்தி, விஞ்ஞான நோட்டத்துடன் மங்கையின் மாண்பை உபபொருளாய் உபயோகித்து, அடிப்பிசகாது, கலைச் சிறப்பு குலையாது, கருத்துச்சுவை குன்றாது கட்டிமுடித்த மணிமண்டபமே, "கொங்கையின் இரகசியம்"

இந்நூல், மருத்துவம், சாமுத்திரிகாலட்சணம், விஞ்ஞான நோக்கு போன்ற பல வாழ்க்கைப் பண்புகளைத் தழுவி, வாசகர்களுக்கு அறிவு களஞ்சியமாம் விளங்குகிறது.